பக்கங்கள் 19+ 03

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 23 வெள்ளிக்கிழமை 08.08.2025 | அதிர்வு 008

## எமது ஆட்சியில் வடக்கை நிச்சயம் கட்டியெழுப்புவோம்

### அமைச்சர் சந்திரசேகர் உறுதி



எமது ஆட்சியில் வடக்கு மாகாணத்தை நிச்சயம் கட்டியெழுப்புவோம் என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித் 03▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# தென்னிலங்கையை உலுக்கிய துப்பாக்கிச்சூடு

## இருவர் சாவு; மூவர் அவசர சிகிச்சைப் பிரிவில்



கொழும்பு, பொரளையில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த 5 இளைஞர்களில் இருவர் இன்று வெள்ளிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொரளை, சஹஸ்புர சிறிசர அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்துக்கு அருகில் துப்பாக்கிச்சூடு நடத் 02▶

# மூதூரில் டிப்பர் - கார் மோதி கோர விபத்து! விவசாய போதனாசிரியர் பரிதாப மரணம்!!

## இளைஞர் ஒருவர் படுகாயம்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை, மூதூர் பொலிஸ் பிரிவிலுள்ள பச்சநூர் சந்தியில் இன்று காலை கார் – ரிப்பர் வாகனங்கள் நேருக்கு நேர் மோதியதில் காரில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அதேவேளை, காரில் பயணித்த மற்றுமொருவர் படுகாயம் அடைந்த நிலையில் மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காகத் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

விபத்தில் காரில் பயணித்த 03▶








# திஸ்ஸ விகாரைக்கு எதிராகப் போராட்டம்

யாழ். வலிகாமம் வடக்கு, தையிட்டியில் அமைந்துள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக பௌர்ணமி தினமான இன்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ள தையிட்டி திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், மக்களுடன் இணைந்து தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன், மாவீரர் போராளிகள் குடும்ப நல காப்பக தலைவர் தீபன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.




## தென்னிலங்கையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்டது.

நேற்று இரவு 8:40 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இரண்டு நபர்களால் இளைஞர்கள் குழுவை குறிவைத்துத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

ரி – 56 துப்பாக்கியைப் பயன்படுத்தி துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டுச் சந்தேகநபர்கள் மோட்டார் சைக்கிளில் சம்பவ இடத்தில் இருந்து தப்பிச் சென்றனர்.

படுகாயமடைந்த 5 இளைஞர்களும் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் களனியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞரும், கொழும்பைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞரும் இன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

கொழும்பைச் சேர்ந்த 21, 23 வயதுடைய 3 இளைஞர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் கூறுகையில்,

“துப்பாக்கிச்சூடு ‘குடு துமிந்த’ கும்பலால் நடத்தப்பட்டுள்ளது. வெளிநாட்டில் தலைமறைவாக உள்ள ‘குடு சத்து’வின் சகோதரர் ஒருவர், நேற்று இரவு சம்பவ இடத்துக்கு வந்துள்ளார்.

துப்பாக்கிதாரிகள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ள நிலையில், மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற நபர் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல், டுபாயில் தலைமறைவாக உள்ள இரு போதைப்பொருள் கடத்தல் கும்பல்களுக்கு இடையிலான மோதலின் விளைவாக இருக்கலாம் எனப் சந்தேகிக்கின்றோம்.” – என்றனர்.

பொரளை பொலிஸார் மற்றும் கொழும்பு தெற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# 19 ஆவது இலங்கை இளைஞர் சம்மேளன நிகழ்வையொட்டி மன்னாரில் விழிப்புணர்வு!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நிர்வகிக்கப்படும் இளைஞர் கழகங்களுக்கான 19 ஆவது தேசிய இளைஞர் சம்மேளன தெரிவானது சர்வதேச இளைஞர் தினமான எதிர் வரும் 12 ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் இடம்பெறவுள்ளது.

சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் நாடு முழுவதும் விழிப்புணர்வு நடைபயணம் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த நிலையில் மன்னார் மாவட்டத் தில் இன்று (08) வெள்ளிகிழமை இடம்பெற்றது.

மன்னார் பஸார் பகுதியில் இன்று வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமான நடைபயணம் பிரதான வீதியூடாக சென்று தலை மன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகத்தைச் சென்றடைந்தது.

இதன்போது இளைஞர்கள் போதைப் பொருள் பாவனைக்கு எதிராகவும், சூற்றுச்சூழலை பாதுகாக்கும் விதமாக வும் பல பதாகைகள் ஏந்தி வீதி வழியாகத் தமது பேரணியை மேற் கொண்டனர்.

இந்த விழிப்புணர்வு நடைபயணத்தில் மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவி பணிப்பாளர் பூலோக ராஜா, இளைஞர் சேவை அதிகாரிகள், இளைஞர்கள், யுவதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# குடும்பத் தகராறினால் மனைவி கணவரால் வெட்டிப் படுகொலை

குடும்பத் தகராறினால் பெண் ஒருவர் அவரது கணவரால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் அரலகங்வில, தியபெதும சந்தி பகுதியில் நேற்று வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

மெதயெல்ல வாவி பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய பெண்ணே வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.



இந்தக் கொலைச் சம்பவம் நீண்ட காலமாக நிலவிய குடும்பத் தகராறினால் இடம்பெற்றுள்ளது என்று ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பெண்ணின் கணவர் என அடையாளம் காணப்பட்ட 48 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் அரலகங்வில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## எமது ஆட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“கடந்த காலங்களில் வடக்குக்கு எதிராக அநீதிகளே கட்டவிழ்த்துவிடப் பட்டன. அதனால்தான் போர்கூட ஏற்பட்டது. எனினும், வடக்கைக் கட்டி யெழுப்புவதற்குரிய அனைத்து வேலைத் திட்டங்களும் தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நாட்டில் இலஞ்ச, ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகச் சட்டம் தனது கடமையைச் செய்ய ஆரம்பித்துள்ளது. இந்நிலையில் இதில் இருந்து தப்பித்துக்கொள்ளும் நோக்கிலேயே சில எதிரணி உறுப்பினர்கள் அரசை விமர்சிக்கத் தொடங்கியுள்ளனர்.

இலங்கையில் வறுமையால் அதிகளவு பாதிக்கப்பட்ட மாகாணமாக வடக்கு மாகாணம் மாறியுள்ளது. இந்த மாகாணத்தை நாம் நிச்சயம் கட்டியெழுப்ப வேண்டும். கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த அனைத்து அரசுகளும், வடக்கை நோக் கியே அனைத்து அநீதிகளையும் கட்ட விழ்த்துவிட்டன.

வன்முறைகள் தலைவிரித்தாடின. இறுதியில் அது யுத்தமாக மாறியது. மக்கள் கொல்லப்பட்டனர். சொத்து இழப்புகள் ஏற்பட்டன.

போர் முடிவடைந்தும் வடக்கு மாகாணம் கட்டியெழுப்பப்படவில்லை. எனினும், எமது ஆட்சியின் கீழ் வடக்கை நோக்கி அனைத்து செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன்மூலம் வடக்கு மாகாணம் நிச்சயம் கட்டியெழுப்பப்படும்.

மலையக மக்கள் 200 வருடங்களுக்கு மேலாக ஏமாற்றப்பட்டுள்ளனர். 200 வருடங்களாக வஞ்சிக்கப்பட்டுள்ளனர். அவர்களை அனைத்து வழிகளிலும் மேம்படுத்துவதற்குரிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்.” - என்றார்.

## மூதூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோப்பூர் பிரதேசத்தைச் சேர்ந்த விவசாய போதனாசிரியரான ஹினாயத்துல்லாஹ் ஜெம்சித் (வயது 33) என்பவர் உயிரிழந்துள்ளார்.

காயமடைந்தவர் தோப்பூரைச் சேர்ந்த முஸ்தகீம் சியான் (வயது 25) எனத் தெரியவருகின்றது. ரிப்பர் சாரதிக்கு எவ்வித காயங்களும் ஏற்படவில்லை.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது, காரில் பயணித்தவர்கள் தோப்பூரில் இருந்து மன்னாருக்கு வேலை நிமித்த மாகச் சென்று கொண்டிருந்தபோது எதிர்த்திசையில் வந்த ரிப்பர் வாகனத் துடன் நேருக்குநேர் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த நபரின் சடலம் மூதூர் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.




# மன்னார் தீவையும்,எமது இருப்பையும் பாதுகாக்க ஒன்று சேர்ந்து ஜனநாயக ரீதியில் போராடுவோம்!

## தவிர எமக்கு வேறு வழியில்லை என்கிறார் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் சிவகரன்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் தீவில் புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு விடயத்தில் அரசு ஒரே நிலைப்பாட்டில் காணப்படுகின்றமையினால் மன்னார் மக்கள் எமது மண்ணையும், எமது வாழ்வியலையும் பாதுகாத்துக் கொள்ள அனைவரும் ஒன்று சேர்ந்து ஜனநாயக ரீதியில் போராட வேண்டும். இதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை என்று மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்தார்.

காற்றாலை அமைத்தல் தொடர்பாக நேற்று வியாழக்கிழமை (7) நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தும் விசேட ஊடக சந்திப்பு இன்று வெள்ளிக்கிழமை (8) மதியம் மன்னாரில் இடம் பெற்றது.

இந்த ஊடக சந்திப்பில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார், மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மார்க்கஸ் அடிகளார், மீனவ அமைப்பின் பிரதிநிதி என்.எம். ஆலம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன் போது அவர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று வியாழக்கிழமை (7) வடக்கு, கிழக்கைச் சேர்ந்த 15 நாடாளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் அமைச்சர்கள் பங்குபற்றுதலுடன் மன்னாரைச் சேர்ந்த சிவில் அமைப்புக்களுடன் இணைந்து மன்னாரில் புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை கோபுரம் அமைப்பது தொடர்பாக நீண்ட கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் எங்களால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளை சாதகமாகப் பரிசீலிக்கக் கூடிய எந்த வாய்ப்பும் அங்கு கிடைக்கவில்லை. வருகை தந்த அதிகாரிகள் சரி, அமைச்சர்களும் சரி எமது கருத்துக்கு முக்கியத்துவம் வழங்கிச் செவி மடுக்கவும் இல்லை. ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் தொடர்ந்தும் இடம்பெறும் என்பதையே அவர்கள் தொடர்ந்தும் வலியுறுத்தினார்களே தவிர பாதிப்புக்கள் சம்மந்தமாகவோ அல்லது மக்கள் தொடர்ந்தும் கோரிக்கைகளை முன் வைக்கிறார்கள் என்பதையோ அவர்கள் கண்டுகொள்ளவில்லை.

மின்சார சபையினுடைய நிறைவேற்று அதிகாரிகள் உண்மைக்கு மாறான தகவல்களையும்,பொய்யான விடையங்களையும் அந்தக் கூட்டத்தில் முன் வைக்க முயன்றார்கள். அதனை நாங்கள் முழுமையாக மறுத்தோம். மன்னார் தீவு பகுதியில் முறையாக காற்றாலை அமைப்பதையும், கனிய மண் அகழ்வை நாங்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்கின்ற விடயங்களை நாங்கள் வழியுறுத்தினாலும் அவர்கள் அதனைச் சாதகமாக பரிசீலிப்பதற்கான எந்த முடிவும் எட்டப்படவில்லை.

மாறாக மீண்டும் பேச்சு ஊடாக காலத்தைக் கடத்தி இந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்ற அடிப்படையில் தான் அவர்கள் கடந்த அரசால் வழங்கப்பட்ட திட்டம் என கூறிக் கொண்டாலும் கூட இந்த அரசுதான் சீலிஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது.கேளிஸ்நிறுவனத்துடனும் ஒப்பந்தம் செய்துள்ளது. ஏனைய மண் விவகாரங்களுடனும் தொடர்பு பட்டு இருக்கின்றது என்கின்ற விடையத்தை நாங்கள் ஆதாரத்துடன் கூறினாலும் கூட அவர்கள் அதனை ஏற்றுக் கொள்வதாக இல்லை.

இரண்டு வாரத்தில் ஜனாதிபதியைச் சந்தித்துக் குறித்த விடயத்தை முடிவுறுத்தலாம் என அமைச்சர்கள் கூறியுள்ளனர்.தற்காலிகமாக இந்தத் திட்டம் இடை நிறுத்தப்பட்டுள்ளது என ஊடகங்களில் வெளி வந்துள்ள செய்தியை பார்க்கின்ற போது எமக்கு கவலையை ஏற்படுத்துகின்றது.

அவ்விதமான எந்த முடிவும் நேற்றைய (7) கூட்டத்தில் எடுக்கப்படவில்லை. ஆலோசிக்கப் பட்டதே தவிர எவ்வித முடிவுகளும் எடுக்கப்படவில்லை. குறித்த கூட்டம் முடிவின்றி முடிந்து போனது.

அதில் கலந்து கொண்ட எங்களுக்கு எவ்வித திருப்தியும் இல்லை. அரசு தாங்கள் நினைத்தபடி இனப்பிரச்சினை விவகாரத்தை எவ்வாறு கையள்கின்றதோ அவ்வாறு தான் அபிவிருத்தித் திட்டங்களையும் கையாள முனைகின்றது.தான்தோன்றித்தனமாக இந்தத் திட்டங்களைத் தாங்கள் நினைத்த படி செய்து முடிக்கலாம் என்று யோசிக்கின்றது. இந்த விடயங்களில் மன்னார் மக்கள் விழித்துக் கொள்ள வேண்டும்.

நாங்கள் ஒன்று கூடி மிகப்பெரிய அளவில் போராட்டம் நடத்தி ஜனநாயக ரீதியாக அரசுக்குப் பாரிய நெருக்கடியைக் கொடுக்கும் வகையில் நாங்கள் அணி திரளாது விட்டால் இந்தத் திட்டங்களை எங்களால் நிறுத்த முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

ஆபத்தான ஒரு நிலையை நோக்கிய இந்தத் திட்டங்களது செயற்பாடுகள் நகர்ந்து கொண்டு செல்கின்றன.

மக்கள் இனியும் விழித்துக் கொள்ளாது மக்கள் சில அற்ப சொற்ப சலுகைகளுக்காக சில கிராமங்களில் இதை செயபடுத்துகின்ற நிறுவனங்கள் மக்கள் சிலருக்கும், அமைப்புகளுக்கும் சில சலுகைகளை வழங்கி அவர்களை விலைக்கு வாங்கி தமக்கு சாதகமான நிலைப்பாட்டை ஏற்படுத்தி முயற்சிக்கின்றன.

எனவே இதற்கு எதிராக மக்கள் கிளர்ந்து எழுந்து ஜனநாயக ரீதியாக போராடி எங்களுடைய வாழ்வியல் இருப்பு உரிமையையும் வாழ்வாதார இருப்பையும் மன்னாரினுடைய உரிமையையும் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் எல்லோரும் முன் வர வேண்டும்.

அரசை நாங்கள் இனியும் நம்பி அரசினுடைய ஜனநாயக கருத்துக்களுக்கு செவி சாய்த்து இந்த விடயங்களில் எமக்கு முன்னேற்றம் ஏற்படும் என்றோ அல்லது சாதகமான பதில் கிடைக்கும் என்றோ அல்லது அரசு இந்த திட்டங்களை நிறுத்தும் என்றோ நாங்கள் நம்பவும் இல்லை. நம்பக் கூடிய அளவுக்கு அவர்களின் சந்திப்புகளும் இல்லை.

தொடர்ச்சி▼

# மன்னார் தீவையும்....

**தொடர்ச்சி▲**

கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ச்சியாக இந்த பாதிப்புகள் பற்றி தெரிவித்து வந்தாலும் கூட நேற்றைய கூட்டத்தின் போது அங்கு வருகை தந்த அதிகாரிகள் முதலாவது தடவையாக இவ்விடயங்கள் பற்றி பேசுவது போல் நடந்து கொண்டார்கள். கடந்த காலத்தில் முன் வைக்கப்பட்ட எந்த கோரிக்கைகளையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவும் இல்லை. அவர்கள் கண்டு கொள்ளவும் இல்லை.அவ்வாறான ஆவணங்கள் இருப்பதாக கூட அவர்கள் தெரிவிக்கவில்லை.

ஆகவே இந்த நிலைப்பாட்டில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம். குறித்த காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகிய இரு திட்டங்களையும் மன்னார் தீவு பகுதிக்குள் நடைமுறைப்படுத்தி விட முடியாது என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

ஆனால் அரசு குறித்த இரு திட்டங்களையும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அபிவிருத்தி என்ற போர்வையில் நாடடுக்கு வருமானம் கிடைக்கும் என்கிற வகையிலும் அரசு யோசிக்கிறது.

எனவே முடிவு மக்களின் கைகளில் இருக்கிறது. இந்தத் திட்டங்களை நிறுத்துவதற்கு நீங்கள் தார்மீக அடிப்படையில் நான் 'மன்னாரான்' என்ற வகையில் செயற்பட வேண்டும்.

இந்த மண்ணை காத்துக் கொள்ளும் எண்ணமும் தெழிலும் எமது அடுத்த சந்ததியினரின் வாழ்வியல் இருப்புக்கு அவசியம் என்பதை உணர்ந்து அனைவரும் முன்வர வேண்டும்.

நாங்கள் ஒன்று சேர்ந்து போராடுவதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவும் இல்லை.- என்றார்.




**நமது கருத்து**
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# கல்விச் சீர்திருத்தம்

புதிய கல்விச் சீர்திருத்தம் குறித்து அதிகம் பேசப்படுகின்றது. பெரும்பாலும் எதிர்க் கட்சிப் பிரமுகர்கள், தொழிற்சங்கவாதிகள் அதிகம் பேசுகின்றனர். ஆனால், அந்தக் கல்வி சீர்திருத்தத்தின் முழு விவரங்கள் யாருக்கும் வெளிப்படையாகத் தெரியவில்லை.

உண்மையில் இது போன்ற விடயங்கள் திடீரென அறிவிப்புக்களாக வருவதில் அர்த்தம் இல்லை. இத்தகைய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் வெளிப்படைத்தன்மை வேண்டும். முன்னைய அரசுகளில் அது இல்லை, எல்லா விடயங்களும் மூடி மறைப்பாக முன்னெடுக்கப்பட்டன என்பதுதான் தற்போதைய ஆட்சியாளர்களின் குற்றச்சாட்டு. இப்போதைய கல்விச் சீர்திருத்த விடயத்திலும் கூட - இந்த அரசின் கீழும் - அதே பாணிதான் நடக்கிறது.

கல்விச் சீர்திருத்தம் என்பது மூடிய அறைக்குள் இருந்து கொண்டு கல்விமான்களும், அதிகாரிகளும் மட்டும் தீர்மானிக்கும் விடயம் அல்ல. இந்த விடயத்தில் பங்குதாரர்கள் பலர். அவர்களுடைய கருத்து நிலைப்பாடும் முழுமையாக உள்வாங்கப்பட வேண்டும். குறைந்தபட்சம் அவர்களுடைய கருத்து உள்வாங்கப்பட்டதான நம்பிக்கையாவது அவர்களுக்கு ஏற்பட வேண்டும்.

ஆனால், இந்தக் கல்விச் சீர்திருத்த விடயத்தில் அப்படி மக்களின் கருத்து உள்வாங்கப்பட்டதான தகவல் ஏதுமில்லை. திடீரென கல்விச் சீர்திருத்தம் பற்றி அறிவிக்கிறார்கள். அது பற்றிப் பேசுகிறார்கள்.

முதலிலே அந்தக் கல்விச் சீர்திருத்தத்துடன் தொடர்புபட்ட தரப்புகளின் கருத்துக்களை செவிமடுத்து, உள்வாங்கி, அதனடிப்படையில் கல்விச் சீர்திருத்தம் தயாராவதான நம்பிக்கை மக்களுக்கு ஏற்படுத்தப்பட வேண்டும்.

கல்விச் சீர்திருத்தம் என்பது வெறுமனே பாடவிதான மாற்றமாக இருப்பதில் அர்த்தமில்லை. அதையும் தாண்டி சமூக மாற்றமாக - கல்வித்துறை எழுச்சியாக - அது முன்னெடுக்கப்பட வேண்டும். அப்படி முன்னெடுப்பதற்கு சமூகத்தின் சம்பந்தப்பட்ட தரப்புகளின் கருத்துக்கள் உள்வாங்கி அவற்றுக்கு மதிப்பளித்து திட்டங்கள் தயாராக வேண்டும்.

எழுபதுகளின் பிற்பகுதியில் ரணில் விக்கிரமசிங்க கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் கல்விச் சீர்திருத்தத்திற்கான வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்டு, அதன் மீது ஆலோசனைகள், விவாதங்கள், கருத்து பரிமாற்றுங்கள் நடைபெற்றன.

இப்போது அப்படி அல்ல. கல்விச் சீர் திருத்தம் என்ற பெயரில் ஒன்றை அறிவித்து, அந்தத் திட்டத்தின் நடைமுறையாக்கம் பற்றி மாவட்ட ரீதியில் பிரசாரம் முன்னெடுக்கப்படுகின்றது. கல்வி பாடத்திட்டங்களின் மாற்றத்துக்கு அப்பால் இலங்கையின் கல்வி முறைமையிலேயே பல விடயங்கள் மாற்றப்பட வேண்டும் என்ற கருத்து நிலைப்பாடும் இருக்கின்றது. அரச பாடசாலைகளின் கட்டமைப்புகள், அவை எங்கெங்கு இயங்குகின்றன, எங்கெங்கு தேவையில்லை என்பன தொடங்கி பல விடயங்கள் ஆராயப்பட வேண்டியிருக்கின்றன.

தற்போதைய அரசுப் பாடசாலைகளில் மூன்றில் ஒரு பாடசாலைகளில் நூறு மாணவர்கள் கூட இல்லை. கல்வி வளம், அதற்கான செலவினம் போன்றவை ஓர் ஒழுங்கு முறையில் பயன்படுத்தப்படுகின்றனவா என்ற கேள்வியும் இருக்கின்றது.

ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு தரப்பும், தாங்கள் அதிகாரத்தை வைத்துக்கொண்டு கல்விச் சீர்திருத்தம் என்று கண்டபடி சகட்டுமேனிக்கு நடவடிக்கை எடுத்தால், அடுத்து வரும் அரசு அதே வேலையைத் திரும்பச் செய்யும். முறையான கல்விச் சீர்திருத்தம் நாட்டில் சாத்தியம் இல்லாமல் போகும். காலத்துக்கு காலம் தொட்டுத் தொட்டு திருத்தங்கள் செய்கின்ற விடயமாக கல்வி முறைமை இருக்க முடியாது.

குறைந்தபட்சம் அடுத்த இரண்டு தசாப்தங்களுக்காவது மாறாத ஒரு கல்வி முறையை ஏற்படுத்த வேண்டும். மாறிவரும் தொழில்நுட்ப உலகில் தேவைப்பாடுகளும் மாறி வருகின்றன. அவற்றுக்கு ஏற்ப கல்வி முறையை உருவாக்குவதற்கு மூடிய அறைக்குள் கல்விமான்கள், அதிகாரிகள், அரசியல் தலைவர்கள் நடக்கும் கலந்தாலோசனைகள் போதுமானவை அல்ல. மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியப் பிரதிநிதிகள், சமூகத்தின் பிற அங்கத்தவர்கள், கல்வி நலனுக்கு உழைக்கத்தக்க பிற கட்டமைப்புகள், தனியார் கல்வி நிறுவனங்கள் என்று பல தரப்பினரினதும் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டு, அதன் அடிப்படையில் வெள்ளையறிக்கை ஒன்று தயாராக வேண்டும். அது குறித்து பகிரங்க விவாதங்கள், கலந்தாலோசனைகள், கருத்துப் பதிவுகள் இடம்பெற வேண்டும். அதன் மீது தான் கல்விச் சீர்திருத்தம் இறுதியாகப்பட வேண்டும்.

அப்படி இல்லாமல் ஏதேனும் ஒரு திட்டத்தை - ஒரு முறைமையை - ஆட்சி அதிகாரப் பெரும்பான்மையை வைத்துக் கொண்டு மக்கள் மீது திணிப்பது கல்விச் சீர்திருத்தம் அல்ல. அது நீண்ட காலத்துக்கு தாக்குப் பிடிக்கப் போவதும் அல்ல. அடுத்த ஆட்சிப் பீடம் மாறும் போதும் அதுவும் மாறிவிடும். இதைச் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்வது நல்லது.

# குளவி கொட்டி ஒருவர் மரணம்



(செ.தி.பெருமாள்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக் குட்பட்ட சாமிமலை பகுதியில் குளவிக் கொட்டுக்கு இலக்கான நபர் வைத்திய சாலைக்குக் கொண்டு சென்ற வேளையில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று மதியம் இடம்பெற்றுள்ளது.

சாமிமலை ஹொரன பெருந்தோட்ட மார்க்கத்துக்கு உரித்தான ஓல்ட்டன் தோட்ட கிங்கோரா பிரிவைச் சேர்ந்த சிவா கனகரட்னம் (வயது 36) என்பவரே குளவிக் கொட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இவர் இன்று மதியம் தான் வளர்க்கும் பசுவுக்குப் புல் வெட்டிக் கொண்டு குடி தண்ணீர் குழாய் செப்பனிடச் சென்ற வேளையில் அதி விஷமுள்ள குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டு சென்ற வேளையில் மரணித்துள்ளார்.

இவரது ச டலம் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் உள்ள சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மஸ்கெலியா பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.






# நிகினி போயா தின தர்ம போதனை நிகழ்வு

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் அறிவுறுத்தலின் பேரில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தால் ஒவ்வொரு பௌர்ணமி தினங்களிலும் ஏற்பாடு செய்யப்படும் தர்ம போதனை நிகழ்வுத் தொடரின் மற்றுமொரு கட்டம் இன்று நிகினி போயா தினத்தை முன்னிட்டு கரகம்பிட்டிய சுபோதாராமய புராண ராஜமஹா விகாரையில் நடைபெற்றது.

இன்றைய தர்ம போதனையை மாத்தளை, உக்குவலை கலல்பிட்டிய புராண விகாரையின் விகாராதிபதியும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தத்துவவியல் மற்றும் உளவியல் கற்கைகள் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளருமான சங்கைக்குரிய கரந்தகொல்ல விஜிததிஸ்ஸ தேரர் நிகழ்த்தினார்.















# நாட்டில் தமிழர்கள் இன அழிப்புச் செய்யப்பட்டுள்ளனர்; ஐ.நா. கூட்டத்தொடரில் இதற்கான குரல் ஒலிக்கவேண்டும்!

## எதிர்வரும் 30 ஆம் திகதி நடத்தப்படும் போராட்டத்துக்கு ஆதரவு கோருகின்றனர் கிழக்கு மாகாணத்தில் உள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கங்கள்

(வாலகிருஸ்ணா)

இந்த நாட்டில் தமிழர்கள் இன அழிப்புச் செய்யப்பட்டுள்ளனர். ஐ.நா. கூட்டத் தொடரின் போது இதற்கான குரல் ஒலிக்கவேண்டும். எதிர்வரும் 30 ஆம் திகதி நடத்தப்படும் போராட்டத்துக்கு அனைத்துத் தரப்பினரையும் ஆதரவு வழங்குமாறு கிழக்கு மாகாணத்தில் உள்ள வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த பிரச்சினை பாதிக்கப்பட்ட மக்களுக்கான பிரச்சினைகள் மட்டுமல்ல முழு தமிழ் இனத்திற்கான பிரச்சினை. எனவே இந்த போராட்டத்துக்கு அனைவரையும் ஒன்றிணையுமாறு வடகிழக்கு மாகாண வலிந்துகாணாமல்ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் உபதலைவியும் மட்டக்களப்பு மாவட்ட வலிந்துகாணாமல்ஆக்கப்பட்ட உறவுகள் சங்க தலைவியுமான திருமதி அ.அமலநாயகி தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கங்களின் தலைவிகள் பங்குகொண்ட ஊடக சந்திப்பு இன்று மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த வடகிழக்கு மாகாண வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் உபதலைவியும் மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல்ஆக்கப்பட்ட உறவுகள் சங்க தலைவியுமான திருமதி அ.அமலநாயகி,

பல ஆண்டுகாலமாக எமது உறவுகளுக்கு நீதிகோரி போராடிய போதிலும் 17வருடமாக இலங்கை அரசு நீதியை வழங்க மறுத்ததன் காரணமாக சர்வதேச நீதிபொறிமுறையின் ஊடாகவே எங்களுக்கு நீதிகிடைக்கும் என்ற நம்பிக்கையில் சர்வதேசத்தினை நோக்கி எங்களது போராட்டத்தை முன்னெடுத்துவருகின்றோம்.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் ஐ.நா. அமர்வில் இலங்கை தொடர்பான பிரச்சினை எடுத்துக்கொள்ளப்படும். அதில் வெளியிடப்படும் அறிக்கைகளில் பாதிக்கப்பட்ட தரப்புக்குச் சாதகமான அறிக்கையாக இருக்கவேண்டும்.




பல்வேறு நாடுகளும் எங்களுக்கு நடந்த அநீதிகளுக்கு நீதிகிடைக்கும் வகையில் அழுத்தங்களை வழங்கவேண்டும் என்பதற்காகவே எதிர்வரும் 30 ஆம் திகதி பாரிய போராட்டங்களை வடகிழக்கில் பாதிக்கப்பட்ட சங்கமாக வடக்கிலும் கிழக்கிலும் நடத்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம்.

செம்மணியில் மீட்கப்பட்ட பொருள்களை வைத்து அவர்களை அடையாளப்படுத்துமாறு கோரியிருந்தார்கள். குடும்பம் குடும்பமாகப் பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அடையாளப்படுத்துவதற்கு அந்த குடும்பத்தில் யாரும் இல்லாத நிலையிருந்தால் அந்த பொருள்கள் எவ்வாறு அடையாளப்படுத்தப்படும். அதற்காக விஞ்ஞான ரீதியான ஆய்வுகளை முன்னெடுத்து சர்வதேச ரீரியான விசாரணை ஒன்று அதன்ஊடாக நடத்தப்பட்டு அவை இனங்காணப்படவேண்டும். அதனை விடுத்து பால் போத்தலைக் கொண்டோ, புத்தகப் பைகளைக் கொண்டோ அடையாளப் படுத்த முடியாது.

உள்ளகப் பொறிமுறை ஊடாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு நீதி வழங்கப்படும் என இலங்கை அரசு சொல்லிக் கொண்டிருக்கின்றது. நாங்கள் காலம் காலமாக உள்ளகப் பொறிமுறை ஊடாக ஏமாற்றப்பட்ட சமூகமாகப் போராடி வருகின்றோம். காலத்தை இழுத்தடிப்புச் செய்றவதும் சர்வதேசத்தின் அழுத்தங்களை குறைப்பதற்காகவும் இந்த உள்ளக பொறிமுறை என்ற விடயத்தினை தற்போதைய அரச தலைவரும் முன்னெடுத்துவருகின்றார்.

எனவே எதிர்வரும் 30 ஆம் திகதி முன்னெடுக்கப்படும்போராட்டமானது எங்களுக்கு நடந்த அநீதிகளுக்கு எதிரான போராட்டம் மட்டுமல்ல ஒட்டுமொத்தமாக வடகிழக்கில் காலம்காலமாக நடைபெற்ற இன அழிப்பும், எங்களுக்கு நடைபெற்ற அநீதிகளுக்கும் எமது உறவுகள் காணாமல்ஆக்கப்பட்ட விடயங்களுக்குமாகவே பாதிக்கப்பட்ட தாய்மார்களாக இந்த போராட்டத்தில் இறங்குகின்றோம்.

எதிர்வரும் 30 ஆம் திகதி முன்னெடுக்கப்படும் போராட்ட பேரணியானது மக்கள் பேரணியாக அமையவேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.இந்த போராட்டத்திற்கு தமிழ் தேசிய பரப்பில் செயற்படும் அனைத்து அரசியல்வாதிகளும் அனைத்து உள்ளூராட்சிமன்ற தவிசாளர்கள், உறுப்பினர்களையும் உள்ளடக்கியதாக இந்த நாட்டில் தமிழ் இனத்துக்கு நடைபெற்றது இனஅழிப்பு என்பதை சர்வதேசத்துக்குக் கொண்டு செல்லும் வகையில் மாபெரும் மக்கள் சக்தியாக இந்தப் பேரணியை உருவாக்க வேண்டும்.

எதிர்வரும் ஐ.நா. அமர்வில் இலங்கை அரசுக்கு இன்னும் இன்னும் கால நீடிப்பை வழங்காமல் சர்வதேசம் நகர்வுகளை முன்னெடுக்கவேண்டும். இந்த நாட்டில் காலத்துக்குக் காலம் வரும் ஜனாதிபதிகள் புதிய சட்டங்களையும் அலுவலங்களையும் உருவாக்கிவிட்டு செல்கின்றார்களே தவிர எங்களுக்கான எந்த நீதியும் கிடைக்கப்பெறவில்லை.

செம்மணி புதைகுழி உட்பட கிழக்கிலும் சாட்சியங்களுடன் உள்ள புதைகுழிகளும் தோண்டப்படவேண்டும். சர்வதேச நிபுணத்துவத்தின் கீழ் அடையாளப்படுத்தப்பட்டு தோண்டப்படவேண்டும்.அத்துடன் கடந்தகாலத்தில் இவ்வாறான சம்பங்களுடன் தொடர்புபட்டவர்கள் என அடையாளப்படுத்தப்பட்டவர்கள் தொடர்பிலும் சர்வதேச விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.- என்றார்.

# இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியின் 135 ஆவது ஆண்டு நிறைவு நடைபவனி

(கி.வசந்தன்)

வவுனியாவின் முன்னணி பாடசாலையான இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் 135 ஆவது ஆண்டைக் கொண்டாடும் முகமாகப் பாடசாலை நிர்வாகத்தின் அனுசரணையோடு பழைய மாணவிகளின் ஏற்பாட்டில் நடைப்பவனி இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் ஒன்பதாம் திகதி சனிக்கிழமை பாடசாலை முன்றலில் இருந்து ஆரம்பமாகும் நடைபவனி, வவுனியா மணிக்கூட்டு கோபுரம் சென்று அங்கிருந்து கடைவீதி வழியாக அந்தோனியார் ஆலயத்தை சென்றடைந்து பாடசாலை பிரதான வாயிலை சென்றடையவுள்ளது.

10 ஆம் திகதி விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. 16 ஆம் திகதி கலாசார நிகழ்வும் இடம்பெறவுள்ளது. பாடசாலையின் பழைய மாணவிகள், தற்போது பாடசாலையில் கற்றுவரும் மாணவிகள், பெற்றோர்கள் அனைவரையும் ஏற்பாட்டு குழுவினர் அழைத்து நிற்கின்றனர்.



# அகில இலங்கை ‘முய் தாய்’ போட்டிகளில் தேசிய ரீதியில் வவுனியா விபுலானந்தா சாதனை

## அபுதாபியில் நடைபெறும் போட்டிக்கும் தெரிவு

(கி.வசந்தன்)

அகில இலங்கை முய் தாய் போட்டிகளில் தேசிய மட்டத்தில் வவுனியா விபுலானந்தா கல்லூரி மாணவிகள் இருவர் சாதனை படைத்து விருதைப் பெற்றுள்ளனர். அபுதாபியில் நடைபெறவுள்ள உலக சம்பியன் சிப் போட்டியிலும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வவுனியா விபுலானந்தா கல்லூரியில் கல்வி பயிலும் 16 – 17 வயது பிரிவில் செல்வி.ஜெசுவா ஜெசிதாஸ், 12 – 13 வயது பிரிவில் செல்வி டர்சிகா தச்சணாமூர்த்தி ஆகியோர் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற ‘முய் தாய்’ போட்டிகளில் (தாய் கிக் பாக் ஸிங்) பங்கு பற்றி தேசிய மட்டத்தில் சாதனை படைத்துள்ளனர்.

குறித்த மாணவிகளை கௌவிக்கும் நிகழ்வு பாடசாலயில் நேற்று (07) இடம்பெற்றது. பாடசாலை அதிபர் திருமதி ஞானமதி மோகனதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாணவிகள் பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் வரழைக்கப்பட்டு அவர்களுக்கு மாலை அணிவித்தும், பரிசில்கள் வழங்கப்பட்டன.

குறித்த மாணவிகள் எதிர்வரும் செம்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை அபுதாபியில் இடம்பெறும் ‘மும் தாய’ உலக சம்பியன் சிப் போட்டியிலும் இலங்கை சார்பாக பங்குபெற்றவுள்ளனர்.

இது தொடர்பில் பாடசாலை அதிபர் திருமதி மோ.ஞானமதி ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த போது,

எமது பாடசாலையிலிருந்து அகில இலங்கை ‘முய் தாய்’ போட்டிகளில் பங்கு பற்றி தேசிய மட்ட விருதுகளை செல்வி. ஜெசுவா ஜெசிதாஸ், செல்வி டர்சிகா தச்சணாமூர்த்தி ஆகியோர் பெற்றுள்ளனர். எதிர்வரும் செம்ரெம்பர் மாதம் 11 தொடக்கம் 20 ஆம் திகதிவரை அபுதாபியில் நடைபெறவிருக்கும் ஜஉம்எப்ஏ ‘மும் தாய்’ உலக சம்பியன் சிப் போட்டிகளில் கலந்து கொள்ளத் தகுதி பெற்றுள்ளனர்.

எனினும் குறிப்பிட்ட இரு மாணவிகளும் பொருளாதார ரீதியான இடர்பாடுள்ளவர்கள். இவர்கள் இப்போட்டியில் பங்கு கொள்வதால் இவர்களது விளையாட்டுத் துறை சார்ந்த எதிர்காலம் சிறப்பாக அமையும். எமது கல்லூரிக்கும், மாவட்டத்துக்கும் மாத்திரமன்றி நாட்டுக்கும் கீர்த்தி உண்டாகும். இவர்கள் இப்போட்டியில் பங்கு கொள்வதாயின் இவர்களுக்கான செலவு தலா ஐந்து லட்சத்து 65 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. இருவருக்கும் 11 இலட்சத்து 30 ஆயிரம்ரூபா தேவைப்படுகின்றது.

எனவே, இவர்களது பொருளாதார நிலையைக் கருத்திற் கொண்டு இவர்கள் இருவருக்கும் இந்தப் போட்டியில் பங்கு கொள்ள ஏதுவாக மேற்படி நிதி அனுசரணை வழங்கி இம் மாணவிகளின் சாதனைப் பயணத்துக்கு உதவ வேண்டும் என நல் உள்ளங்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த உதவி தொடர்பாக கல்லூரி அதிபராகிய என்னுடனோ அல்லது உடற்கல்வி ஆசிரியர் சுந்தராங்கன் ஆசிரியருடனோ தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன் .– என்றார்.







# காட்மோர் நீர்வீழ்ச்சி 2026 ஆம் ஆண்டில் சுற்றுலாத் தலமாக மாற்றியமைக்கப்படும்!

## சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் ருவான் ரணசிங்க தெரிவிப்பு

(பொகவந்தலாவ எஸ்.சதீஸ்)

எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு காலப் பகுதில் காட்மோர் நீர்வீழ்ச்சி சுற்றுலா தலமாக மாற்றியமைக்க எமது அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சுற்றுலா துறை பிரதி அமைச்சர் ருவான் ரணசிங்க தெரிவித்தார்.

இன்று (08) வெள்ளிக்கிழமை மஸ்கெலியா காட்மோர் நீர் வீழ்ச்சி பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு கள ஆய்வு செய்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

இந்தக் கண்காணிப்பு விஜயத்தின் போது நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் கலைச்செல்வி மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த பிரதி அமைச்சர்,

இது போன்ற பிரதேங்களை அபிவிருத்தி செய்யும் போது இந்தப் பிரதேச மக்கள் பொருளாதார வளத்தை அதிகரித்து கொள்ள முடியும். அனைத்து நிறுவனங்களையும் இணைத்துக் கொண்டு விசேடமான சுற்றுலா பிரதேசமாக எதிர்வரும் காலங்களில் இதனை உருவாக்க முடியும்.

இதற்கு முன்னரும் இந்தப் பகுதியை அபிவிருத்தி செய்வதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டாலும் அது இடம் பெறவில்லை. இந்தப் பகுதிக்கு அநேகமான சுற்றுலா பயணிகள் வருகிறார்கள். இருந்தாலும் இங்கு வருபவர்களுக்கான எந்த ஒரு வசதிகளும் இங்கு இல்லை. அடுத்த வரவு – செலவு திட்டத்தில் இதற்கான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும்.

காட்மோர் பகுதிக்கான பிரதான வீதியின் புணரமைப்பு பணிக்காக மாகாண அபிவிருத்தி அதிகார சபைக்கு நிதி ஒதுக்கீடு செயாயப்பட்டுள்ளது. இது தொடர்பான அபிவிருத்திப் பணிகள் வெகுவிரைவில் இடம்பெறும். இது ஒரு தனியார் தோட்டம் என்ற வகையில் பிரதேச சபையின் ஊடாக இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

எல்ல மற்றும் கண்டி ஹம்பாந்தோட்டை போன்ற பகுதிகளுக்குச் சுற்றுலாப் பயணிகளை அதிகரித்துள்ளது போல், காட்மோர் பகுதிக்கும் சுற்றுலா பயணிகளை அதிகரிக்க வேண்டும். சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக புதியதொரு நிலையத்தையும் அமைக்க நடவடிக்கை எடுப்போம்.

பெருந்தோட்டம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்தியாரத்ன ஊடாக மலையக பெருந்தோட்ட மக்களுக்கான காணி, வீடமைப்பு, கல்வி, சுகாதாரம் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளையும் மேற்கொண்டு வருவதோடு தற்போது கூட மலையக மக்களுக்கான முகவரியை வழங்கத் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு முதலில் வீடமைப்புத் திட்டதை ஏற்படுத்தி வழங்கியதன் பின்னர் அவர்களுக்கான காணி உரிமையைப் பெற்றுக் கொடுபாபதற்கான கலந்துரையாடலை நாம் மேற்கொண்டு வருகிறோம்.

கடந்த அரசில் உள்ளவர்களைப் போல், தொழிலாளர் தினத்தை முன்னிட்டு பொய்யான வர்த்தமானியை வெளியிட்டு மக்களை ஏமாற்ற நாங்கள் தயாராக இல்லை. ஆகவே வாழ வாதாரத்தை முறையாக முன்னெடுத்துச் செல்வதற்கான ஒரு வேதனத்தை வழங்க எமது அரசு நடவடிக்கை எடுக்கும். – என்றார்.

# சுகாதார வைத்திய அதிகாரியாக நியமனம்!

(றிபாஸ்)

சுகாதர அமைச்சால் வழங்கப்பட்ட வருடாந்த இடமாற்றத்துக்கு அமைய மூதூர் சுகாதார பணிமனையின் சுகாதார வைத்திய அதிகாரியாக வைத்தியர் நூர் முஹம்மது கஸ்ஸாலி நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த காலங்களில் இரு தடவைகள் மூதூர் சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய இவர் மூதூர் மத்திய கல்லூரி, அக்கரைப்பற்று மத்திய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவருமாவார்.

மூதூர் சீ.எஸ். ஆர்.அமைப்பின் ஆரம்பகால தலைவராகவும், லயன்ஸ் கழக தலைவராகவும், மூதூர் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கச் செயலாளராகவும் கடமைப்பட்டுள்ளார்.

ஸ்ரீ ஜெவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீட பட்டப் படிப்பை நிறைவு செய்து கேகாலை மாவட்ட வைத்திய சாலையில் தனது மருத்துவர் பணியை ஆரம்பித்து திருகோணமலை மாவட்ட வைத்தியசாலை, மூதூர் பொது வைத்தியசாலை, சம்பூர், தோப்பூர், சேனையூர் போன்ற வைத்தியசாலைகளிலும் கடமையாற்றியுள்ளார்.

ஓமான் நாட்டின் இராணுவ வைத்தியசாலையிலும் நான்கு வருடங்கள் சேவையாற்றிமையும் குறிப்பிடத்தக்கது.





# வகுப்பறைக்கு அப்பால் அனுபவ கற்கை பயணம்

‘விசன்ஸ் குளோபல் எம்பவர்மென்ட் நிறுவனத்துடன் இணைந்து வடமராட்சி, தென்மராட்சி, மற்றும் வலிகாமம் வலயங்களில் உள்ள 14 பாடசாலைகளைச் சேர்ந்த “இளையோர் கனவு மெய்ப்படல்” திட்டத்தில் பயன்பெறும் தரம்-6 மாணவர்களுக்கு ஒரு நாள் சிறப்பு வெளிக்களப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த வெளிகளப் பயணத்தில் 249 மாணவர்கள் மற்றும் 35 ஆசிரியர்கள், பெற்றோர்கள் இணைந்து வகுப்பறைக்கு வெளியே அனுபவக் கற்கை ஊடாக, வாழ்க்கை திறன்களைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது.



மாணவர்கள் நிலாவரைக் கிணறு, தொண்டைமானாறு, கீரிமலை, காங்கேசன்துறை கடற்கரை, மயிலிட்டி மீன்பிடி துறைமுகம், யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பொது நூலகம், சுப்பிரமணியம் பூங்கா, யாழ்ப்பாணக் கோட்டை மற்றும் நாவற்குழி அருங்காட்சியகம் போன்ற முக்கிய கலாச்சார மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களைப் பார்வையிட்டிருந்தனர்.

இவற்றுள் குறிப்பாக மாணவர்களை யாழ்ப்பாண நூலகம் மற்றும் பல்கலைக்கழகத்துக்கு அழைத்துச் சென்றிருந்தமை ஒரு சிறப்பம்சமாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறைத் தலைவரால் பல்கலைக்கழக வரலாறு மற்றும் எதிர்கால வாழ்க்கைக்கான ஆர்வத்தைத் தூண்டும் ஊக்க விழுமியங்கள் வழங்கப்பட்டமை மாணவர்களிற்கு கற்றல் தொடர்பில் உத்வேகத்தை ஏற்படுத்தியது.

இந்தப் பயணம் வெறுமனே இடங்களைச் சுற்றிப் பார்ப்பது மட்டுமல்லாமல், மதிப்புமிக்க வாழ்க்கைத் திறன்களை, மாணவர்களை வகுப்பறைக்கு அப்பால் கற்றுக்கொள்ள வாய்ப்பாக அமைந்தது.





# பச்சிலைப்பள்ளி பிரதேச மட்ட சிறுவர், பெண்கள் விழிப்புணர்வு

பச்சிலைப்பள்ளி பிரதேச மட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுக் கூட்டம் மற்றும் பெண்களுக்கு எதிரான பால்நிலை, பால்நிலை வன்முறைக்கு எதிரான கூட்டம் என்பன பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் இ. த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றன.

கலந்துரையாடலில் பாடசாலை மாணவர்களின் இடை விலகல் மற்றும் ஒழுங்கீனம், பிறப்பு சான்றிதழ் இல்லாதோரின் விவரங்கள், தனியார் கல்வி நிலையங்களின் பௌதீக வள நிலைமை, சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள் அதற்கு எதிரான நடவடிக்கைகள், இளவயது திருமணங்கள் தொடர்பாக சிறுவர், பெற்றோரை விழிப்புணர்வடையச் செய்தல் என்பன தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

கலந்துரையாடலில் உதவி பிரதேச செயலாளர், மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர், பொலிஸ் உத்தியோகத்தர், கோட்டக்கல்வி அலுவலக உத்தியோகத்தர், பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி பேரவைத் தலைவர், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், பெண்கள் வாழ்வுரிமை கழகம், ஜெசாக், குட்லக் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# அலுவலர்கள் மக்களைத் தேடிச்சென்று குறைபாடுகளை நிவர்த்திக்க வேண்டும்!

## மக்கள் குறைகேள் சந்திப்பில் வடக்கு ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

மக்கள் எங்களைத்தேடி வரக்கூடாது. மக்களுக்கான சேவைகளை முன்னெடுக்கும் அலுவலர்கள்தான் மக்களைத் தேடிச்சென்று அவர்களது குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டும். அதற்கு அமைவாகவே பின்தங்கியுள்ள தீவுகளுக்கான எமது மக்கள் குறைகேள் சந்திப்பு நடத்தப்படுகின்றன.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார். அத்துடன் இந்த மக்கள் குறைகேள் சந்திப்பில் மக்களால் முன்வைக்கப்பட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகளும் எட்டப்பட்டன.

வடக்கு மாகாண சபையின் ஒழுங்கமைப்பில் மக்கள் குறைகேள் சந்திப்பு நேற்று வியாழக்கிழமை (07) அனலைதீவில், அனலைதீவு ஹரிகர புத்திர ஜயனார் ஆலயச் சுற்றாடலிலுள்ள மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது, 'பணத்தையும், நேரத்தையும் விரயம் செய்து எமது அலுவலகங்களை ஒவ்வொன்றாகத் தேடி மக்கள் அலைவதைவிட அனைத்து அலுவலர்களையும் உங்களிடம் அழைத்து வந்தால் உங்கள் பிரச்சினைகளை இலகுவாக தீர்க்க முடியும் என்ற ஆளுநரின் நிலைப்பாட்டுக்கு அமைவாக குறைகேள் சந்திப்பு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது' என வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன் குறிப்பிட்டார்.

ஆளுநர் தனது உரையில்,

அரசு கூட மக்களின் பிரச்சினைகளைத் தேடிச் சென்று தீர்க்குமாறே கூறுகின்றது. ஜனாதிபதி கூட அண்மையில், மக்களுக்குச் சேவை செய்யும் நிறுவனங்கள் மக்களின் தேவைகளை அறிந்து செயலாற்ற வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார். அலுவலகங்களில் இருந்தால் மக்களின் முன்னுரிமைகளை எம்மால் கண்டறிய முடியாது. இவ்வாறான களப் பயணங்கள், குறைகேள் சந்திப்புகளிலேயே மக்களின் முன்னுரிமைகளை எம்மால் இனம்காண முடியும்.

அனலைதீவிலுள்ள பஸ்அடிக்கடி பழுதடைவதாக மக்கள் குறிப்பிட்டனர். அடுத்த கட்டமாக யாழ். மாவட்டத்துக்கு பஸ்கள் வழங்கப்படும்போது கடல் கடந்த தீவுகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் புதிய பஸ்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை என்னால் ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ளது என்று ஆளுநர் இதன்போது தெரிவித்தார்.

பாடசாலைக்கு ஆசிரியர்கள் உரிய நேரத்துக்கு வருவதற்கு ஏதுவாகப் படகுப் பயண நேரம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அது தொடர்பில் படகுச் சேவைகளை நடத்துபவர்களை அழைத்துக் கலந்துரையாடல் நடத்தி நேர மாற்றத்தை நடைமுறைப்படுத்துமாறு ஊர்காவற்றுறை பிரதேச செயலருக்கு, ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.

இந்திய மற்றும் குருநகர் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களில் இழுவைமடிப் படகுகளால் பாதிப்பை எதிர்கொள்கின்றனர் என்று மீனவர்கள் குற்றம் சுமத்தினர்.

இந்திய மீனவர்களின் வருகை கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்துள்ளது என்று கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் சார்பில் கலந்துகொண்ட பிரதிநிதி குறிப்பிட்டார்.

அத்துடன் இலங்கையில் குறிப்பிட்ட சில இடங்களில் இழுவைமடி மீன்பிடிக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் குருநகரைச் சேர்ந்த மீனவர்கள் அதனை மேற்கொள்கின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

குருநகர் பகுதியைச் சேர்ந்த மீனவர்களின் படகுகளால் ஏதாவது பாதிப்பு ஏற்படுவது ஆதாரத்துடன் முன்வைக்கப்பட்டால் அதற்குரிய இழப்பீடு சம்பந்தப்பட்ட சங்கத்திடமிருந்து பெற்று வழங்கப்படுவதாகவும் ஆளுநருக்கு அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது, இழப்பீடு அறவிடுவதுடன் மாத்திரமல்லாது மீண்டும் அதே தவறை அவர்கள் இழைத்தால் அவர்களுக்கான அனுமதியை இரத்துச் செய்யவேண்டும் என்று ஆளுநர் வலியுறுத்தினார்.

அதேநேரம், குருநகர் மீனவர்களின் இழுவைமடிப் படகுகள் கண்ணகை அம்மன் கோயிலடியில் நிறுத்தப்படுவதால் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் அந்தப் படகுகளை அங்கிருந்து அகற்ற வேண்டும் எனவும் மீனவர்கள் கோரிக்கை முன்வைத்தனர். இதற்குரிய நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும் என்றும் தாகவும் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் குறிப்பிட்டார்.

அனலைதீவிலிருந்து நோயாளர்களைக் கொண்டு செல்வதற்கான

தொடர்ச்சி▼







# அலுவலர்கள் மக்களைத் தேடிச்சென்று குறைபாடுகளை நிவர்த்திக்க வேண்டும்!

தொடர்ச்சி▲

நோயாளர்காவு வண்டிப் படகுக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதனைக் கொள்வனவு செய்து வழங்குவதற்கான நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அனலைதீவு பிரதான வீதியை அகலித்து புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்த நிலையில், மக்கள் ஒத்துழைப்பு வழங்கினால் பிரதேச சபை ஊடாக அதனைச் செய்து தர முடியும் என்று பிரதேச சபையின் தவிசாளர் அன்னராசா தெரிவித்தார்.

அனலைதீவு மேற்கு கடற்கரை வீதி புனரமைக்க வேண்டும் என்று மக்கள் கோரினர். கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டத்தில் 2.1 கிலோ மீற்றர் உள்வாங்கப்பட்டுள்ளது என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர்களால் பதிலளிக்கப்பட்டது.

அதேநேரம், அனலைதீவு மடத்தடி வீதியை, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாகப் புனரமைக்கவும் ஆளுநர் பணிப்புரை விடுத்தார். வீதிப் புனரமைப்பின்போது கடந்த காலங்களில் மதகு இருந்த இடத்தில் மதகு அமைத்தே புனரமைக்குமாறு மக்கள் கேட்டுக்கொண்டனர்.

மக்கள் பணவைப்பு மற்றும் பணம் மீளப்பெறலுக்கு ஏற்றவாறு வங்கிச் சேவை ஒன்று தமது தீவில் அமைக்கப்பட வேண்டும் என மக்கள் கோரிக்கை முன்வைத்தனர். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக பிரதேச செயலர் குறிப்பிட்டார்.

கலங்கரை விளக்கு அமைக்கப்பட வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அது அமைக்கப்படும் எனவும் இறங்குதுறையில் 5 சோலர் மின்விளக்குகளும் பொருத்தப்படும் என்றும் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள பிரதிநிதியால் தெரிவிக்கப்பட்டது.

மேற்கு கடலோரத்தில் கடலணை அமைப்பதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதற்கான நிதியைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் ஆராய்வதாக ஆளுநர் பதிலளித்தார்.

ஏற்கனவே வழங்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படாத அரச காணிகளை மீளப்பெற்று காணியில்லாதவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரும் பதில் காணி ஆணையாளருமான அ.சோதிநாதன் குறிப்பிட்டார்.

ஊர்காவற்றுறை பிரதேச சபை வருமானம் குறைந்த பிரதேச சபை என்ற அடிப்படையில், தற்போதுள்ள நிலையில் சபையின் வருமானத்தில் 20 சத வீதத்தை ஊழியர்களின் சம்பளத்துக்கு வழங்குவது என்பது சுமையாக உள்ளமையால் இரண்டு ஆண்டுகளுக்கு அதை விலக்களித்து உதவவேண்டும் என சபைத் தவிசாளர் கோரிக்கை முன்வைத்தார். இது தொடர்பில் உள்ளூராட்சி அமைச்சுக்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தவிசாளரின் இணைப்பாளர் சு.கபிலன் பதிலளித்தார்.

மக்கள் குறைகேள் சந்திப்பு முடிவடைந்த பின்னர் புளியந்தீவு இறங்குதுறையை ஆளுநர் சென்று பார்வையிட்டார். அந்த இறங்குதுறை புனரமைப்பை உலக வங்கியின் திட்டத்தின் கீழ் உள்வாங்க நடவடிக்கை எடுக்குமாறு பணித்ததுடன், அதற்கான இணைப்பு வீதியை வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் குறிப்பிட்டார்.

இறுதியாக அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலயத்தையும் ஆளுநர் சென்று பார்வையிட்டார். அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடினார். சகல பாடங்களுக்கும் ஆசிரியர்கள் நியமிக்கப்படாமை தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. கடல் கடந்த தீவகப் பிரதேசங்கள் தொடர்பில் கூடிய கவனம் எடுத்து செயற்படுமாறு வலயக் கல்விப் பணிப்பாளரை ஆளுநர் கேட்டுக்கொண்டார். மேலும், அனலைத்தீவைச் சேர்ந்த ஆசிரியர்கள் வெளியிடங்களில் பணியாற்றினால் அவர்களை மீளவும் அனலைதீவிலுள்ள பாடசாலைகளுக்கு நியமிப்பதற்கான நடவடிக்கைகளையும் ஆராயுமாறு ஆளுநர் குறிப்பிட்டார்.

ஆளுநரின் குறைகேள் சந்திப்பில், பிரதம செயலாளர், தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், ஆளுநரின் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், மகளிர் விவகார அமைச்சின் செயலாளர், சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், ஊர்காவற்றுறை பிரதேச செயலர், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரின் இணைப்பாளர், கடற்றொழில் அமைச்சரின் பிரதிநிதி, வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், வீதி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் விவசாயத் திணைக்களம் ஆகியவற்றின் மாகாணப் பணிப்பாளர்கள், வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், மாகாண சுதேச வைத்தியத்துறையின் ஆணையாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், சுகாதார மருத்துவ அதிகாரி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், கடலோர பாதுகாப்புத் திணைக்களம், கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம், இலங்கை மின்சார சபை, இலங்கை போக்குவரத்துச் சபை, நீர்பாசனத் திணைக்களம் உள்ளிட்டபல்வேறுதிணைக்களங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.








# ஓகஸ்ட் 6, 9 அணுவாயுதம் பரீட்சித்த நாள்!

● என்.ஹரன்

இன்று உலகை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் அமெரிக்க உத்திகளில் சிக்கித் தவிக்கும் இஸ்ரேல் ஈரான் மற்றும் உக்ரைன், ரஸ்யா யுத்தத்தைப் போன்று, ஒகஸ்ட் 6 - 1945, இந்த உலகமே மறக்க முடியாதபடி, உலகின் முதல் அணுகுண்டு ஜப்பான் நாட்டின் ஹிரோஷிமா நகர்மீது வீசப்பட்டது. பின்னர் ஒகஸ்ட் 9 - 1945 அன்று நாகசாகிமீது வீசப்பட்டது இரண்டாவது அணு குண்டு. இதுநாள் வரையில் இதன் தாக்கங்களைச் சுமந்து கொண்டிருக்கும் ஜப்பான், இன்று ஹிரோஷிமா குண்டுவெடிப்பின் 75 ஆவது நினைவு நாளை நினைவு கூர்ந்து வருகிறது.

இரண்டாம் உலகப் போர் காரணமாக ஜப்பான், அமெரிக்காவின் முத்து துறைமுகத்தைத் தாக்கவே அதற்குப் பதிலடி கொடுக்க விரும்பியது அமெரிக்கா. அதற்காக ஜப்பான்மீது குண்டு வீசுவதற்கான இறுதி உத்தரவு ஓகஸ்ட் 2 ஆம் திகதி பிறப்பிக்கப்பட்டது.

தற்காலத்தில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் கண்டனம் மற்றும் உலக நாடுகளின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் வட கொரியா தொடர்ந்து அணு ஆயுதங்களையும், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளையும் சோதித்து வந்தது. அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடைகளையும் கண்டுகொள்ள வில்லை.

அமெரிக்காவுக்குப் பெரும் தலைவலியைக் கொடுக்க, இரு நாடுகளுக்கும் இடையே போர் பதற்றம் உருவானது. பின்னர் கடந்த 2023 ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் திகதி, சிங்கப்பூரில் அமெரிக்க அதிபர் ட்ரம்பும், வடகொரிய தலைவர் கிம் ஜாங் அன்னும் சந்தித்து பேசினர். அப்போது, கொரிய தீபகற்பத்தை அணு ஆயுதங்கள் இல்லாத பகுதியாக மாற்ற வடகொரியா முன்வந்தது. இது தொடர்பாக இரு தரப்பிலும் ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன் பின்னர் ஆயுத சோதனைகளை வடகொரியா நிறுத்தியது.


அமெரிக்காவுடனான இரண்டாம் கட்ட பேச்சில் எந்த முடிவும் எட்டப்படாத நிலையில், வடகொரியா மீண்டும் ஆயுத சோதனையைத் தொடங்கி உள்ளது. சமீபத்தில் குறுகிய தூரம் சென்று தாக்கக்கூடிய ஏவுகணைகளை சோதனை செய்தது. இதற்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. ஆனால், இது தற்காப்புக்காக நடத்தப்பட்ட பயிற்சிதான் என வடகொரியா விளக்கம் அளித்துள்ளது.


இந்த நிலையில், வடகொரியாவின் இந்த செயல் உலக அமைதிக்கு அச்சுறுத்தலாக இருப்பதால், அணு ஆயுதங்கள் மற்றும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் மற்றும் அது தொடர்பான சோதனை திட்டங்களை கைவிட வேண்டும் என்று 70 நாடுகள் வலியுறுத்தி உள்ளன.

இது தொடர்பாக பிரான்ஸ் நாடு கொண்டு வந்த இந்த வரைவு அறிக்கையில், அமெரிக்கா, தென் கொரியா மற்றும் ஆசிய நாடுகள், இலத்தீன் அமெரிக்க நாடுகள், ஐரோப்பிய நாடுகள் என மொத்தம் 70 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. வடகொரியாவை ஆதரிக்கும் சீனாவும் ரஷ்யாவும் இந்த அறிக்கையில் கையெழுத்திடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஹிரோஷிமா, கோகுரா, நாகசாகி மூன்று நகரங்களும் இறுதி இலக்குகளாக முடிவு செய்யப்பட்டு ஒகஸ்ட் 6 ஆம் திகதி அதிகாலை 1.45 மணிக்கு (ஜப்பான் நேரம்) அணுகுண்டைச் சுமந்துகொண்டு 'எனோலா கே' என்ற பி-29 ரக விமானம் புறப்பட்டது. 'லிட்டில் பாய்' என்ற அந்த குண்டு, இன்று வரை உலகம் பார்த்த மிக

தொடர்ச்சி▼







# ஓகஸ்ட் 6, 9 அணுவாயுதம் பரீட்சித்த நாள்!

தொடர்ச்சி▲

மோசமான பேரழிவை ஹிரோஷிமாமீது கட்டவிழ்த்தது.

இந்தத் தாக்குதல் பல லட்சக் கணக்கான மக்களைக் கொன்று குவித்து இன்று வரையில் அதன் ரணங்களை விரவச்செய்து வருகிறது.

குண்டுவீச்சு தாக்குதல் நடந்த 72 ஆவது நினைவு தினம் ஜப்பானிலுள்ள அமைதிப் பூங்காவில் நேற்று முன்தினம் அனுசரிக்கப்பட்டது. ஜப்பான் பிரதமர் உள்ளிட்ட பல முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொண்ட இந்த அஞ்சலிக் கூட்டத்தில் 'உலகில் அமைதி நிலவ, அணு ஆயுதங்களை ஒழிக்க வேண்டும். இதற்கான இயக்கத்தை தலைமையேற்று வழிநடத்தவும் ஜப்பான் தயாராக உள்ளது' என அறிவிக்கப்பட்டது.

உலக வரலாற்றில் மிகக்கொடூரமான தக்குதல் என்றால் அது ஜப்பான் மீதுஅமெரிக்க நடத்திய அணு ஆயுதத் தாக்குதல்தான். 1945 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி ஜப்பானின் ஹிரோஷிமா நகரத்தின்மீது 'டலைவடந டிழல' என்ற அணுகுண்டை அமெரிக்காவீசியது. மூன்று நாள்கள் கழித்துநாகசாகி நகரத்தின் மீது கயவ டிழல என்ற அணுகுண்டை வீசியது . இந்த குண்டு வீச்சினால் ஏற்பட்ட மரணங்களும் சேதமும்இன்றுவரைதுல்லியமாகமதிப்பிடமுடியவில்லை.

சுமாராகக் ஹிரோஷிமாவில் மட்டும் குறைந்தபட்சம் 1, 40,000 பேரும் 74,000 பேர் நாகசாகிலும் மரணமடைந்தனர்.இந்த தாக்குதலின் கதிர்வீச்சால் பாதிக்கப்படவர்களின் நிலை மிகவும் மோசமாயிருந்தது. குண்டு வீச்சு நிகழுந்து பல ஆண்டுகள் கழித்து பிறந்த குழந்தைகள்கூட இந்த அணுகுண்டியின் கதிர்வீச்சால் பாதிப்புக்குள்ளாகினர்.

முதல் அணுகுண்டு வீச்சு – அமெரிக்கா ஹிரோஷிமா நகர் மீது 1945 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 6 ஆம் திகதி உலகின் முதல் அணுகுண்டை வீசியது. இதில் ஏராளமான பொருள் சேதகங்களும் உயிர் சேதங்களும் ஏற்பட்டன. அணு ஆயுதங்கள் அதிகரித்து வருவது உலக பாதுகாப்பை அச்சுறுத்துவதாக இருக்கிறது மேலும் உலகத் தலைவர்கள் அனைவரும் அணு ஆயுதங்கள் இல்லாத நாட்டை உருவாக்கம் வேண்டும் என்று கட்டுரையாளர் கேட்டுக்கொள் கின்றார்.

2 ஆயிரம் மடங்கு பெரியது குண்டு – அமெரிக்க அதிபர் ஹாரி எஸ் ட்ரூமன் குண்டு வீசப்பட்ட தகவலை அட்லாண்டிக் கடலில் நிறுத்தி வைக்கப்பட்ட போர்கப்பல் அகஸ்டாவிலிருந்து அறிவித்தார். இதற்கு முன் உருவாக்கப்பட்ட பெரிய குண்டை விட 2 ஆயிரம் மடங்கு பெரிய குண்டு அதிபர் எனவும் அவர் கூறினார்.

குண்டின் பெயர் லிட்டில் பாய் – ஹிரோஷிமா மீது வீசப்பட்ட குண்டுக்கு "லிட்டில் பாய்" எனப் பெயர் வைக கப்பட்டிருந்தது. முந்தைய அதிபர் ரூஸ்வெல்ட்டைக் குறிக்கும்வகையில் இந்தப் பெயர் வைக்கப்பட்டிருந்தது. 12-15 ஆயிரம் தொன் டிஎன்டி வெடிபொருள் சக்தியை அந்த அணுகுண்டு கொண்டிருந்தது. 13 சதுர கிலோ மீற்றர் பரப்பை அந்த அணுகுண்டு நாசம் செய்தது.

அமெரிக்க பி – 29 – உள்ளூர் நேரப்படி காலை 8.15 மணிக்கு எனோலா கே என்ற அமெரிக்க பி – 29 விமானத்தில் இருந்து இந்த குண்டு வீசப்பட்டது.

ஆவியான சம்பவம் – குண்டு விழுந்த இடத்தில் இருந்து 500 அடி சுற்றளவில் இருந்த அனைவரும் அப்போதே ஆவியாகினர்.

ஜப்பான் அறிவிப்பு – இந்த குண்டு வீச்சில் 1,18,661 பொது மக்கள் கொல்லப்பட்டனர் என்று அந்த நேரத்தில் ஜப்பான் அறிவித்தது.

1,40,000 பேர் பலி – ஹிரோஷிமாவில் வசித்த 3,50,000பேரில்1,40,000பேர்கொல்லப்பட்டிருக்கலாம் என அறியப்படுகிறது. இந்த குண்டு வீச்சால் ஏற்பட்ட கதிர்வீச்சில் பலர் நீண்ட காலத்துக்கு நோய்வாய்ப்பட்டு இறந்தனர். பலர் உடல் ஊனமடைந்தனர்.

நாகசாகி மீது மீண்டும் குண்டு வீச்சு – இதற்கு மூன்று நாள்களுக்குப் பிறகு, நாகசாகி நகரத்தின் மீது மீண்டும் ஒரு அணுகுண்டு வீசப்பட்டது. இதனால் 74,000 பேர் கொல்லப்பட்டனர்.

நேசநாடுகளிடம் சரணடைந்த ஜப்பான் – இந்த அணுகுண்டு வீச்சால் ஆசிய உலகப் போர் சட்டென முடிவுக்கு வந்தது. ஆனால், குண்டை வீசுவதற்கு முன்பாகவே ஜப்பான் சரணடையும் நிலையில் இருந்தது என்று விமர்சகர்கள் கூறுகின்றனர். இரண்டு அணு குண்டுகள் வீசப்பட்டதும், 1945 ஓகஸ்ட் 8 ஆம் திகதி யன்று ஜப்பான் மீது சோவியத் ரஷ்யா போர்ப் பிரகடனம் செய்ததும் ஜப்பானுக்கு வேறு வழியில்லாமல் போனது. அதே மாதம் 14 ஆம் திகதி நேச நாடுகளிடம் சரண டைந்தது ஜப்பான்.

அணு ஆயுதங்கள் அதிகரித்து வருவது உலக பாது காப்பு அச்சுறுத்துவதாக இருக்கிறது. மேலும் உலகத் தலைவர்கள் அனைவரும் அணு ஆயுதங்கள் இல்லாத நாட்டை உருவாக்க வேண்டும் என்று கட்டுரையாளர் எதிர்பார்க்கின்றார் . எது எப்படி எனினும் இன்றுவரை தலைமை நாடுகள் ஆயுத உற்பத்தியை நிறுத்தாமை யானது கவலை தரும் விடயமே.

# இமாச்சலப் பிரதேசத்தில் வெள்ளம்; அதிகரிக்கும் உயிரிழப்பு எண்ணிக்கை




இந்தியாவின் இமாச்சலப் பிரதேசத்தில், பருவமழையையொட்டி பெய்து வரும் அதிகளவிலான மழை காரணமாக வெள்ளம் மற்றும் மண்சரிவு போன்றவற்றால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இமாச்சலப் பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் கால்நடைகள், வீடுகள் மற்றும் உட்கட்டமைப்புகளுக்கு பெரிய அளவிலான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

அதன்படி, வெள்ளம் மற்றும் மண்சரிவு போன்ற பாதிப்புகளால் இதுவரை 199 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், 493 வீதிகள், 1,120 மின் மாற்றிகள் மற்றும் 245 நீர் விநியோக திட்டங்கள் பாதிப்படைந்துள்ளன.

# தமிழகத்தின் புதிய கல்விக் கொள்கையை வெளியிட்டார் முதலமைச்சர் ஸ்டாலின்



தமிழகத்தின் புதிய கல்விக் கொள்கையை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் வெளியிட்டு வைத்தார்.

தமிழகத்தின் தனித்துவமான கல்விக் கொள்கையை உருவாக்கும் நோக்கில், 2022 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்ற டில்லி உயர் நீதிமன்ற நீதிபதி முருகேசன் தலைமையில் 14 உறுப்பினர்களைக் கொண்ட குழுவினரால் இக் கல்விக் கொள்கை உருவாக்கப்பட்டது.

இந்த குழு, துணைவேந்தர்கள், கல்வியாளர்கள், ஆசிரியர்கள், தனியார் பள்ளி நிர்வாகிகள், பெற்றோர் என பல தரப்பினரிடம் பரிந்துரைகள் மற்றும் கருத்துக்களை சேகரித்து ,இப் புதிய கல்விக் கொள்கையை வடிவமைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இப் புதிய கல்விக் கொள்கை முதல்வர் ஸ்டாலின் இன்று அதிகாரப்பூர்வமாக வெளியிட்டு வைத்துள்ளார்.

பாடசாலைக் கல்வியிலிருந்து பட்டப்படிப்புவரை முழு கல்வி தாய் மொழியில் வழங்கப்பட வேண்டும் என்பது இக்கொள்கையின் முக்கிய அம்சம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் முதல்வர் ஸ்டாலின் உரையாற்றுகையில்,

“பாடசாலை மாணவர்கள், இளைஞர்களை பார்த்தாலே புதிய உற்சாகம் பிறந்து விடுகிறது. இந்த ஆண்டு பள்ளிக்கல்வி முடித்த 75 வீத மாணவர்கள் உயர்கல்வியில் சேர்ந்துள்ளனர். ஐ.ஐ.டியில் தமிழக மாணவர் சேர்க்கை ஒற்றை இலக்கத்தில் இருந்து இந்த ஆண்டு 27 வீதமாக உயர்ந்துள்ளது. தொலைநோக்கு பார்வையுடன் இந்தக் கல்விக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த கல்விக்கொள்கை மூலமாக படித்து மனப்பாடம் செய்து கேள்வி கேட்கிற மாணவர்களை விட, சிந்தித்து கேள்வி கேட்கின்ற மாணவர்களை உருவாக்க விருக்கிறோம். எதிர்கால வாழ்க்கைக்கு தேவையான ஆற்றலை வழங்க இருக்கிறோம். படிக்கிறவர்களாக மட்டுமல்ல, படைப்பாற்றல் கொண்டவர்களாக மாணவர்களை உருவாக்க நினைக்கிறோம்.

கல்வியுடன் உடற்பயிற்சியும் இணைக்கப்படும். தாய் மொழி, அதாவது தமிழ் மொழி நம் அடையாளமாக பெருமிதமாக இருக்கும். தமிழும் ஆங்கிலமும் தான் உறுதியான கொள்கை. இருமொழி கொள்கை தான் நமது உரிமையான கொள்கையாக இருக்கும். பசுமை பள்ளிகள் ஸ்மார்ட் வகுப்பறைகள் உருவாக்கப்படும்.

ஒவ்வொரு ஒன்றியத்திலும் புதிய மாதிரி வெற்றிப் பள்ளிகள் அமைக்கப்படும். உண்டு உறைவிட பள்ளி உருவாக்கப்படும். கல்வி தொலைக் காட்சியும், மணற்கேணி செயலியும் ஒவ்வொரு வீடும் ஒரு வகுப்பறை என்ற நிலையை உருவாக்கும். அரசுப் பள்ளிகள் வறுமையின் அடையாளம் அல்ல பெருமையின் அடையாளம்.

மதிப்பெண்கள் நோக்கி அல்லாமல் மதிப்பீடுகளை நோக்கி பயணம் அமையும். நான் முதல்வன் திட்டம் வேலைக்கு வழிகாட்டியாக மட்டுமல்லாமல் வாழ்க்கைக்கு வழிகாட்டுவதாக அமையும். இவ்வாறு கல்வித்துறையில் மாபெரும் மாற்றத்தை கொண்டு வர இருக்கிறோம். கல்வி எல்லோருக்குமானது, அங்கு பாடுபடு இருக்காது. அங்கு கல்வி பாகுபாட்டை நீக்குவோம்.

நீங்கள் விரும்புகின்ற கல்வியை பெறுவதற்கான வாசலை நமது கல்விக் கொள்கை திறந்து வைக்கும். சமத்துவ கல்வியை உருவாக்குவோம். அறிவு கல்வியை அறிமுகம் செய்வோம், அது பகுத்தறிவு கல்வியாக இருக்கும். மாணவர்கள் உலக அளவில் போட்டி போட வெற்றி பெற இந்த மாநில கொள்கை உதவிகரமாக இருக்கும். கல்வியில் முன்னணி மாநிலமாக இருக்கின்ற தமிழகத்தை மேலும் முன்னேற்றுவோம்.” என்றார்.



# கென்ய தலைநகர் நைரோபியில் விமான விபத்து; 6 பேர் உயிரிழப்பு

கென்யா தலைநகர் நைரோபி யில் மருத்துவர்களால் இயக்கப்படும் செஸ்னா விமானம் விபத்துக்குள் ளானதில் 6 பேர் உயிரிழந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரி விக்கின்றன.



வில்சன் விமான நிலையத்தி லிருந்து புறப்பட்ட விமானம், சோமா லியாவின் ஹர்கீசாவுக்குச் சென்று கொண்டிருந்தபோது, நைரோபியின் கிதுராய் பகுதியில் உள்ள ஒரு குடியிருப்பு கட்டடத்தில் மோதி தீப்பிடித்து எரிந்ததாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

விபத்து நடந்த இடத்திற்கு அருகிலி ருந்த இரண்டு பேர் உயிரிழந்துள்ளது டன் இரண்டு பேர் படுகாயமடைந் துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

விமானம் புறப்பட்ட மூன்று நிமி டங்களில் தொடர்பை இழந்ததாக கென்யா சிவில் ஏவியேஷன் ஆணையம் தெரிவித்துள்ளது.

விபத்துக்கான காரணத்தைக் கண் டறிவதற்கான விசாரணைகள் நடை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படு கிறது.

# உக்ரைன் போர் நிறுத்த பேச்சுவார்த்தை; ட்ரம்ப்பும் புடினும் சந்திப்பதில் சந்தேகம்

உக்ரைன் போர் நிறுத்தம் தொடர் பில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ரஷ்ய ஜனாதிபதி விளாடி மிர் புடினை விரைவில் சந்திக்க உள்ள தாகத் தெரிவித்துள்ள நிலையில், இன்னும் அதற்கான இறுதி வடிவம் கொடுக்கப்படவில்லை.



வொஷிங்டனும் மொஸ்கோவும் ஒரு சாத்தியமான உச்சி மாநாட்டை எவ்வாறு நடத்தப்போகின்றன என் பது குறித்து இதுவரை அறிவிப்புக்கள் வெளியிடவில்லை.

இந்த சந்திப்பு அடுத்த வாரம் இடம் பெறும் என்று கிரெம்ளினும் ஒப்புக் கொண்டுள்ளது.

இந்த சந்திப்பு நடைபெற்றால் 2021ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் புடின் முன்னாள் ஜனாதி பதி ஜோ பைடனை சந்தித்தமைக்கு பின்னர், இரண்டு நாடுகளின் தலை வர்களுக்கும் இடையே நடைபெறும் முதலாவது சந்திப்பாக அது இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த சந்திப்பின்போது உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியும் இணைத்துக்கொள் ளப்படுவாரா என்பது குறித்து தகவல் கள் வெளியாகவில்லை.

ஏற்கனவே சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாமல் செலன்ஸ்கியை சந்திக்கப்போவதில்லை என்று புடின் தெரிவித்துள்ள நிலையில், புடினுடனான சந்திப்பில், ஜெலென்ஸ்கி இணைத்துக் கொள்ளப்படுவதைத் தாமும் விரும்ப வில்லை என்று ட்ரம்ப்பும் தெரிவித் துள்ளார்.

பக்கங்கள் - 03

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 08/08/2025

## கனடிய விமான நிலையத்தில் தட்டம்மை குறித்து எச்சரிக்கை



C2 ▶



# கனடாவில் நிலத்துக்கு அடியில் பயங்கர நிலநடுக்கம் ஏற்படும்

## ஆய்வாளர்கள் எச்சரிக்கை

கனடாவை ஒரு பெரிய நிலநடுக்கம் தாக்கக் காத்திருப்பதாக ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

கனடாவின் யூகோன் பிரதேசத்தில் அமைந்துள்ள டாவ்சன் நகருக்கு அருகிலுள்ள வனப்பகுதிக்கு அடியில், வரலாற்று யுகத்துக்கு முன், பயங்கர நிலநடுக்கங்கள் ஏற்பட்டதற்கான அடையாளங்களை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள்.

அந்த நிலப்பரப்புக்கு அடியில் இருக்கும், நீண்ட காலமாக மறக்கப்பட்ட, நிலநடுக்கங்களை உருவாக்கக்கூடிய டின்டினா என்னும் நிலப்பிளவு, மிகப்பெரிய ஒரு நிலநடுக்கத்தை உருவாக்கக் காத்திருப்பதாக ஆய்வாளர்கள் எச்சரிக்கிறார்கள்.

அப்படி ஒரு நிலநடுக்கம் ஏற்படுமானால், அது ரிக்டர் அளவுகோலில் 7.5 அளவில் இருக்கும் என்றும், அது கனேடிய வரலாற்றில் மிகப்பெரிய ஒரு நிலநடுக்கமாக இருக்கும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

பூமிக்கு அடியிலுள்ள நகரும் நிலத்தட்டுகளின் அசைவால் ஏற்படும் அழுத்தத்தை சுமார் 12,000 ஆண்டுகளாக அடக்கி வைத்திருக்கும் அந்த நிலப்பிளவு, அந்த அழுத்தத்தை எப்போது வேண்டுமானாலும் வெளியிடலாம் என்றும், அது நிலநடுக்கமாக வெடித்துக் கிளம்பும்போது உருவாக்கும் சேதம் பயங்கரமாக இருக்கும் என்றும் ஆய்வாளர்கள் தெரிக்கிறார்கள்.

C2 ▶

# மார்க்கம் நகர சபை இடைத்தேர்தலில் தமிழர் ஒருவருக்கு குவியும் ஆதரவு







மார்க்கம் நகர நகர சபை இடைத்தேர்தலில் போட்டியிடும் கிள்ளிவளவனுக்கு முன்னாள் அங்கத்தவர் யுனிற்றா நாதன் ஆதரவு வழங்கவுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவின் மார்க்கம் நகர நகர சபையின் 7 ஆம் வட்டாரத்திற்கான இடைத்தேர்தல் எதிர்வரும் செப்டம்பர் 29 ஆம் திகதி நடைபெறவுள்ளது. மேற்படி இடைத்தேர்தலில் ஐவர் போட்டியிட்டாலும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் ஒருவரான கிள்ளிவளவனுக்கு மக்கள் ஆதரவு அதிகரித்துள்ளதாக நம்பம்படுகின்றது.

குறிப்பாக மேற்படி மார்க்கம் நகர சபையின் 7 ஆம் வட்டாரத்தின் முன்னாள் அங்கத்தவரும் தற்போது பிக்கரிங் தொகுதிக்கு மத்திய நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளவருமான யுனிற்றா நாதன் ஆதரவு

C2 ▶

# கனடிய விமான நிலையத்தில் தட்டம்மை குறித்து எச்சரிக்கை





கனடிய விமான நிலையத்தில் தட்டம்மை நோய் தொற்று குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடாவின் முக்கிய விமான நிலையங்களில் ஒன்றான பியர்சன் விமான நிலையத்தின் முதலாம் இலக்க முனையத்தில் பயணம் செய்த இரண்டு பயணிகள் தட்டம்மையினால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் 30 ஆம் திகதி அதிகாலை 5 மணி முதல் முற்பகல் 11 மணி வரையிலான காலப் பகுதியில் இரண்டு விமானங்களில் பயணம் செய்த பயணிகளுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தட்டம்மை நோய் அறிகுறிகள் தென்பட்டால் அது குறித்து விசேட கவனம் செலுத்துமாறு குறித்த விமானப் பயணிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த விமான முனைய வலயத்தில் சஞ்சரித்த அனைவரும் நோய் அறிகுறிகள் குறித்து எச்சரிக்கையுடன் இருக்குமாறு சுகாதார தரப்பினர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

கனடாவில் இந்த ஆண்டில் தட்டம்மை நோயாளர்கள் அதிகளவில் பதிவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 15 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற கொலை குறித்து மீண்டும் விசாரணை

கனடாவில் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பில் மீண்டும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

15 ஆண்டுகளுக்கு முன்பு சென் கேதரின்ஸில் இடம்பெற்ற வீட்டு தீ விபத்தில் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் உயிரிழந்த ஒரு பெண்ணின் கொலை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2010 ஒகஸ்ட் 4 ஆம் திகதி ஓக்வுட் அவென்யூவில் உள்ள லிவியா பெயர்ன்ஸ் என்பவரின் வீட்டில் தீ விபத்து ஏற்பட்டதாக தீயணைப்பு வீரர்களுக்கு அழைப்பு வந்தது.

தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்த போது பெயர்ன்ஸ் அடித்தளத்தில் இருந்து உதவி கோரி கூச்சலிட்டதை கேட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



குறித்த வீட்டில் பெயர்ன்ஸ் என் பெண் கட்டப்பட்ட நிலையில் இருந்ததை பொலிஸார் கண்டுள்ளனர்.

மேற்படி பெண்ணை மீட்ட தீயணைப்புப் படையினர் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர் என்றும் ஆனால் மறுநாள் உயிரிழந்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பெயர்ன்ஸ் என்ற உயரிழந்த பெண்ணுக்கு அப்போது 76 வயது என பொலிஸார் தெரிவித்தனர்.

பெயர்ன்ஸை கட்டுவதற்காக பயன்படுத்திய 'டேப்' வகையானது சில்லறை கடைகளில் கிடைக்காதவை எனவும், கொலையாளி இதனை எடுத்து வந்து கட்டியுள்ளார் என பொலிஸார் ஊகம் வெளியிட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் இருந்தால் அறிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

---

**மார்க்கம் நகர...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

வழங்கவுள்ளார் என அறியப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் யுனிற்றா நாதன் கடந்த தன்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரச்சார அலுவலகத்தின் திறப்பு விழாவிலும் கலந்து கொண்டார் என்பது குறிப்பிட்த்தக்கது.

தன்கிழமை நடைபெற்ற தனது தேர்தல் பிரச்சார அலுவலகத்தின் திறப்பு விழாவில் உரையாற்றிய வேட்பாளர் கிள்ளவளவன் உரையாற்றும்போது.

தான் கடந்த தேர்தலில் போட்டியிட்டு கணிசமான வாக்குகளைப் பெற்று தனது ஆதரவை அறிந்து கொண்டதாலும் தன்னிடம் உள்ள ஆற்றல் மற்றும் அனுபவம் ஆகியவற்றை பிரயோகித்து தன்னால் சிறந்த சேவையை வரியிறுப்பாளர்களுக்கு வழங்க முடியும் என்று நம்பிக்கைத் தெரிவித்தார்.

பிரச்சார அலுவலகத் திறப்பு விழாவில் திரண்டு வந்து கலந்து கொண்ட நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் அனைவரும் தங்கள் ஆதரவை முழுமையாக வழங்குவோம் என்று உறுதியளித்துச் சென்றனர் என்பதும் பல அமைப்புக்களின் பிரதிநிதிகளும் அங்கு கூடியிருந்து தங்கள் ஆதரவை தெரிவித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

**கனடாவில்...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

விக்டோரியா பல்கலை, ஆல்பர்ட்டா பல்கலை மற்றும் கனேடிய நிலவியல் ஆய்வுத்துறையின் ஆய்வாளர்கள் இணைந்து இந்த செய்தியை உறுதி செய்துள்ளார்கள்.

ட்ரோன்கள், விமானங்களில் பொருத்தப்பட்ட LiDAR (Light Detection and Ranging) என்னும் தொழில்நுட்பத்தின் உதவியுடன் இந்த விடயங்களைக் கண்டுபிடித்துள்ளார்கள் அவர்கள்.

உடனடியாக ஆபத்து வரைபடங்கள் மூலம் எளிதில் பாதிக்கப்படும் அபாயத்திலிருக்கும் இடங்களைக் கண்டறிந்து, உள்கட்டமைப்பை வலுப்படுத்தி, வடக்கில் வாழும் சமூகத்தினரை தயார்ப்படுத்தி, நிலநடுக்கத்திலிருந்து தப்ப, தக்க நடவடிக்கைகளை எடுக்காத பட்சத்தில், வரலாற்றில் இதுவரை கண்டிராத ஒரு பேரழிவை கனடா சந்திக்கக்கூடும் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.



# டொராண்டோவில் வார இறுதியில் வெப்பநிலையில் மாற்றம் ஏற்படும்

டொராண்டோவில் இந்த வார இறுதி நாள்களில் வெப்பநிலை மாற்றம் ஏற்படும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரு நாள்களிலும் பகல்நேர வெப்பநிலை 30 பாகை செல்சியஸ்/க்கு மேல் இருக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

டொராண்டோவில் இன்று வெப்பநிலை 27 பாகை செல்சியஸாக இருக்கும் எனவும் ஈரப்பதனை கருத்திற் கொண்டால் 32 பாகை செல்சியஸாக உயர்வடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை பகல்நேர உயர்ந்த வெப்பநிலை 31 பாகை செல்சியஸாக இருக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமையில் வெப்பநிலை அதிகமாக இருக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

# இந்திய நடிகரின் தேநீர் விடுதியின் மீது இரண்டாவது முறையாக துப்பாக்கிச் சூடு








கனடாவின் சர்ரேயில் உள்ள நடிகர் கபில் சர்மாவின் தேநீர் விடுதியில் இந்த மாதம் இரண்டாவது முறையாக துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

குறைந்தது 25 முறை துப்பாக்கி சத்தம் கேட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுமட்டுமின்றி, தாக்குதல் சம்பவத்தின் இடையே, தங்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படவில்லை என்றால், அடுத்த தாக்குதல் மும்பை நகரில் நடத்தப்படும் என்றும் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் பேசுவது வெளியான காணொலி ஒன்றில் பதிவாகியுள்ளது.

இதனையடுத்து மும்பை பொலிஸ் மற்றும் பிற பாதுகாப்பு அமைப்புகள் இந்த விவகாரத்தை விசாரித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜூலை 10ஆம் திகதி முதல் தடவையாக கபில் சர்மாவின் புதிதாக தொடங்கப்பட்ட தேநீர் விடுதி மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

அப்போது சில ஊழியர்கள் தேநீர் விடுதிக்குள் இருந்துள்ளனர். ஆனால் எவரும் அந்த தாக்குதலில் காயம்படவில்லை. குறைந்தது 10 முறை துப்பாக்கியால் சுட்டுள்ளனர்.

இந்த நிலையில், ஜூலை 10 ஆம் திகதி நடந்த துப்பாக்கிச் சூட்டுக்கு காலிஸ்தான் பிரிவினைவாதி ஒருவர் பொறுப்பேற்றார் என தகவல் வெளியானது.

மேலும் சீக்கிய சமூக மக்களின் பாரம்பரிய உடை தொடர்பில் கபில் சர்மா நிகழ்ச்சி ஒன்றில் பகடி செய்தார் எனவும் இது தங்கள் சமூகத்தின் உணர்வுகளைப் புண்படுத்தியதாகவும் பயங்கரவாதக் குழுவான பாபர் கல்சா இன்டர்நேஷனல் உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருந்தார்.

ஜூலை 10 ஆம் திகதி நடந்த துப்பாக்கிச் சூட்டுக்கு ஹர்ஜித் சிங் லட்டி என்பவர் பொறுப்பேற்றார்.

கனேடிய அரசாங்கத்தால் BKI ஒரு பயங்கரவாத அமைப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. தேசிய புலனாய்வு அமைப்பின் மிகவும் தேடப்படும் பட்டியலிலும் லட்டி இடம்பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.